# விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிசடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 ஓய்வூதிய நலத்திட்டத்தின் தொடர்ந்தியங்குதல்

விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் மீதியானது கீழே காட்டப்பட்டவாறு 2005 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,309.3 மில்லியனிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 44,154.2 மில்லியன் எதிர்மறையான மீதிக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகளின்படி, சகல நிதிகளும் 2010 ஆகஸ்ட் மாத இறுதியில் தீர்ந்துபோய்விட்டதுடன் அதன்பின்னர் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் சபையில் இருக்கின்ற வேறு நிதிகளிலிருந்து குறுகியகாலக் கடன்களைப் பெறுவதன்மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகவே விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் எதிர்காலத் தங்கியிருத்தல் அரசாங்க மானியங்களில் மொத்தமாகத் தங்கியிருக்க வேண்டியிருந்தது..

| ஆண்டு | திட்டத்தின் மீதி |
|---|---|
| | ரூபா மில் |
| 2005 | 2,309.3 |
| 2006 | 2,003.7 |
| 2007 | 1,639.8 |
| 2008 | 1,404.8 |
| 2009 | 663.8 |
| 2010 | (40,536.7) |
| 2011 | (44,154.2) |

### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன்படி பணிக்கொடை சூத்திர முறையைப் பயன்படுத்தி பிந்திய ஊழிய நன்மைக்கான கடப்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் மேற்குறித்த தேவைப்பாடுகளிற்கிணங்க, பணிக்கொடைப் பொறுப்பு கணிப்பிடப்பட்டிருக்கவிலல்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

1992 இலிருந்து மாற்றப்படாதவையாக இருக்கின்ற மூன்று வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட 117 காசோலைகள் தொடர்பிலான ரூபா 1,179,624 தொகையான தேறாத வைப்புக்களின் பெறுமதியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாக இருக்கின்ற ரூபா 125,079,264 கூட்டுமொத்தத் தொகையை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காட்டப்பட்ட ரூபா 9,335,445 தொகையான பெறவேண்டிய கணக்குகளின் மொத்த மீதிகளில் ரூபா 3,538,729 அல்லது 38 சதவீதம் மாத்திரமே தொடர்புபட்ட பகுதியினரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) ரூபா 2,082,031 கூட்டுமொத்த தொகையான செலுத்தப்படவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் நீண்டகாலமாகத் தீர்க்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) திட்டத்தின் சகல நிதிகளும் தீர்ந்துபோன மையால் மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்திடமிருந்து ரூபா 518,000,000 மற்றும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையிடமிருந்து ரூபா 149,030,442 ஆகிய குறுகிய கால கடன்களை எடுப்பதன் மூலம் மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. மேற்குறித்த கடன்கள் தொடர்பில மீளாய்வாண்டின் போது எவ்வித தீர்ப்பனவுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

அரசாங்க கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் திட்டத்திற்காக புதிய மென் பொருள் தயாரிப்பதற்காக கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலைக்கு ரூபா 1,475,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 1.2.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 செப்டெம்பர் 26 ஆம் திகதிய எவ்ஏஎஸ்/சீஎம்/2006/18 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின்படி, மாவில் ஆறு அணைக்கட்டு மூடியதன் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளிற்காக விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டதிலிருந்து ரூபா 176 மில்லியனெ ஒதுக்குவதற்கு திர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 194,169,155 தொகையான முதலீடுகள் இந்த நோக்கத்திற்காக கழிவுக்குமாற்றப்பட்டதுடன் ரூபா 120,198,639 ஆன தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட இழப்பீடு திறைசேரியிலிருந்து பெறவேண்டியவையாக தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித்திட்டத்தின் ரூபா 2,791,679 பெறுமதியான நாற்பத்து எட்டுக் காசோலைகள் மற்றும் ரூபா 7,152,249 பெறுமதியான வங்கி வரைவுகள் என்பன சபையின் 2 பணிப்பாளர்கள் மற்றும் ஒரு உதவிப் பணிப்பாளர் என்போரால் 2008 ஆம் ஆண்டில் மோசடியாக பயன்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததென சபையானது எனக்கு அறிவித்திருந்தது.

(இ) ரூபா 369,590 தெைாகயான பணத்தை மோசடியாக பயன்படுத்திய வெளிக்கள உத்தியொகத்தருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மீளாய்வாண்டின் போது தள்ளுபடி செய்யப்பட்டது. எவ்வாறாயினும் அவரிடமிருந்து ரூபா 100,000 தொகை மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் வழக்கு முடிவுக்கு வந்தது. ஆகவே மிகுதி ரூபா 269,590 அறவிட முடியாதிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 3,617,570,558 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 3,921,267,739 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் அது நிதிசார் விளைவுகளில் ரூபா 303,697,181 அல்லது 4.74 சதவீதமான பற்றாக்குறையின் வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

### 2.2 நிதிசார் விளைவுகள் மற்றும் நிதி நிலைமை என்பவற்றின் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

(அ) அரசாங்க மானியங்களிலிருந்து நிர்வாகச் செலவினத்தின் ஒரு பகுதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதியத்தின் நிதி நிலைமை ஆபத்தான நிலைமையில் தொடர்ந்திருந்தது. திட்டத்தின் நிதிசார் விளைவுகள் கீழே காட்டப்பட்டவாறு 2007 இன் இறுதியில் ரூபா 364 மில்லியன் பற்றாக்குறையிலிருந்து 2011 திசெம்பர் 31 இல் ரூபா 3,617 மில்லியன் பற்றாக்குறையாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் சாத்தியத்தன்மை பற்றி ஆபத்தான நிச்சயமற்ற தன்மையிலுள்ளது. முன்னைய 5 ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகள் கீழே தரப்படுகின்றன.

| | 2011<br>ரூபா (000) | 2010<br>ரூபா (000) | 2009<br>ரூபா (000) | 2008<br>ரூபா (000) | 2007<br>ரூபா (000) |
|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 115,434 | 170,898 | 306,607 | 431,209 | 501,983 |
| மொத்தச் செலவினம் | (1,402,379) | (1,195,110) | (1,103,779) | (951,623) | (891,660) |
| ஓய்வூதிய பொறுப்பின் அதிகரிப்பு | (3,059,459) | (2,938,033) | - | - | - |
| தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (4,346,404) | (3,962,245) | (797,172) | (520,414) | (389,677) |
| அரசாங்க மானியம் | 727,605 | 39,500 | 55,860 | 285,000 | 25,603 |
| அரசாங்க மானியத்தின் காலக்கழவு | 1,228 | 1,477 | - | - | - |
| அரசாங்க மானியத்தின் பின்னர் .தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (3,617,571) | (3,921,268) | (741,312) | (235,414) | (364,074) |

(i) வருமானமானது 2007 முதல் 2011 வரையான காலப்பகுதியின் போது 77 சதவீதத்தால் படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதேநேரம் மொத்தச் செலவினமானது அதே காலப்பகுதியின் போது 57 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) ஓய்வூதிய பொறுப்பு தாபித்தல் மற்றும் செலவின அதிகரிப்புக் காரணமாக அரசாங்க மானியத்திற்கு முன்னரான தேறிய மிகை 2007 முதல் 2011 வரையான காலத்தின் போது பாரதுர்ரமாக வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் திட்டத்திற்காக விவசாயிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த பங்களிப்புகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | பங்களிப்புகள் | ஓய்வூதியக் கொடுப்பனவு |
|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் |
| 2007 | 222.6 | 685.7 |
| 2008 | 163.1 | 809.1 |
| 2009 | 148.7 | 955.6 |
| 2010 | 136.7 | 1,044.7 |
| 2011 | 97.6 | 1,226.7 |

(இ) முதலீடுகள் 2006 ஆம் ஆண்டிலிருந்து விரைவாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் முதலீடுகளிலிருந்தான வருமானமும் கீழே காட்டப்பட்டவாறு 2011 ஆம் ஆண்டில் பாரியளவு வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

| ஆண்டு | முதலீடுகள் | முதலீட்டு வருமானம் |
|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் |
| 2006 | 1,985.3 | 264.4 |
| 2007 | 1,656.0 | 251.3 |
| 2008 | 1,256.1 | 243.9 |
| 2009 | 582.2 | 138.9 |
| 2010 | 3.5 | 14.9 |
| 2011 | 30.7 | 1.6 |

மேற்குறித்த தகவல்களின்படி, முதலீடுகள் 2006 இல் இருந்த ரூபா 1,985.3 மில்லியனிலிருந்து 2011 ஆம் ஆண்டில் ரூபா 30.7 மில்லியன் அல்லது 98.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் வட்டி வருமானம் 2006 இல் இருந்த

ரூபா 264.4 மில்லியனிலிருந்து 2011 ஆம் ஆண்டில் ரூபா 1.6 மில்லியன் அல்லது 99.4 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆண்டிற்காக விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 11,385,125 தொகையான இரண்டாவது மற்றும் அதற்குப் பின்னரான தவணைப் பணங்கள் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது திட்டத்திற்கு எந்தவெரு விவசாயியும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது உறுப்புரிமையை இழந்த 615 பங்களிப்பாளர்களிற்கு ரூபா 5,994,479 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்கான கணிப்பீட்டுச் சபையால் அறிக்கையிடப்பட்ட ரூபா 173,789 பெறுமதியான பயன்படுத்தப்படாத இருப்புக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்திட்டங்களின் அமுலாக்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டத்தின் ஆளுக்குரிய தனிப்பட்ட கணக்குகளை கணனி மயப்படுத்துவதற்காக 1987 இலிருந்து ரூபா 21.5 மில்லியனான தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்குகள் கணனிமய்படுத்தப்பட்டிருக்காததுடன் திட்டம் தாபித்ததிலிருந்து 24 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கணக்குகள் நாளதுவரையாக்கப்பட்டிக்கவில்லை. திட்டமானது விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டத்திற்கு பங்களிப்புக்களின் கொடுப்பனவிற்கு தகைமைபெற்ற பங்களிப்பாளர்களை நிர்ணயிப்பதற்கு போதிய தகவல்களை கொண்டிருக்கவில்லை. மாவட்ட அலுவலகங்களிலும்

கூட பங்களிப்பாளர்களின் கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டத்திற்கான புதிய கணனிமயப்படுத்தல் முறைமையொன்றை விருத்தி செய்வதற்காக 2008 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதிவரை அதில் ஏற்பட்ட செலவினம் ரூபா 5,479,120 ஆகும். உடன்படிக்கையின்படி, செயற்திட்டம் ஆறு மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும், ஆனால், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் கூட அது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக்காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமை
(ஆ) நிதி முகாமைத்துவம்
(இ) ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் செலுத்தப்படாத ஓய்வூதியங்களும்